(ஈ) கோரிக்கை எண் 57—ஊரகத்தொழில்கள் குறித்த மூலதனச்செலவு

திரு. பொன். விஜயராகவன் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றதாகக் கருதப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: ''மானியக் கோரிக்கை எண். 57— ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,40,95,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

6. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) சட்டமன்றப் பேரவையின் 50-வது ஆண்டு நிறைவுவிழா நிகழ்ச்சி குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 5-5-1989 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 50 ஆம் ஆண்டு நிறைவு விழா நடைபெறுகிறபொழுது மூத்த உறுப்பினர் களைச் சிறப்பித்தல் என்ற பகுதியில், முன்னாள் உறுப்பினர்களும் சிறப்பிக்கப்படுவார்கள். மூத்த உறுப்பினர்களாகிய இந்நாள் உறுப் பினர்களும் சிறப்பிக்கப்படுவார்கள்.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று நாளை (22-4-1989) காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-25 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

82. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு இந்தியாவில் தயாரிக்கப் பட்ட அயல்நாட்டு சாராவிகள் (தயாரிப்பு) விதிகளில் திருத்த மொன்று செய்வது குறித்து மதுவிலக்கு—ஆயத்தீர்வைத் துறையின் 7-6-1988 ஆம் நாளிட்ட 1159 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குசட்டம் 10/1937) 54(3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.

83. 1987–88 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு திரையரங்குக் கழகத்தின் பதினாறாவது ஆண்டறிக்கை 1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.

1989 ஏப்ரல் 21]

பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

110. கோரிக்கை எண். 27-தமிழ்நாடு கதர் கிராமத்தொழில் வாரியத்தின் கொள்கையும், திட்டங்களும் 1989-90 (தமிழ், ஆங்கிலம்).

111. கோரிக்கை எண். 30—சமூக நலன் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு 1989-90 (தமிழ், ஆங்கிலம்).

112, தொழில் கொள்கையும், திட்டங்களும் (ஊரகத் தொழில்களும் சிறு தொழில்களும்) 1989-90 (தமிழ், ஆங்கிலம்).

113. பட்டு வளர்ச்சி பற்றிய சாதனைத் திட்டம் 1988–89 (தமிழ், ஆங்கிலம்).

114. சமூக நலத்துறை பற்றிய சாதனைத் திட்டம், 1989–90 (ஆங்கிலம்)

இணைப்புகள்.

இணைப்பு I.

மானியக் கோரிக்கை எண். 27

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்.

கொள்கையும் திட்டங்களும் 1989–90.

[....ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

தமிழ்நாட்டில் கதர் கிராமத் தொழில்களின் வளர்ச்சி மற்றும் மேம்பாட்டுப் பணிகள் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியச் சட்டம், 1959 இன் கீழ் இவ்வாரியம் உருவாக்கப்பட்டது. இவ்வாரியம் உள்ளூரில் கிடைக்கும் வளங்களை பயன்படுத்தி சுய வேலை வாய்ப்பளிக்கிறது. கிராமப்புற ஏழை மக்களின் பொருளாதார வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நோக்கத்துடன் வேலை வாய்ப்புகளை உருவாக்குகிறது. 1960 ஏப்ரல் திங்களிலிருந்து இவ்வாரியம் செயல்பட்டு வருகிறது. கதர் கிராமத் தொழில் பணிகள், வாரியத்தின் துறை அலகுகள், கூட்டுறவு சங்கங்கள் மற்றும் கிராமங்களில் தனிநபர் அலகுகளை ஊக்குவிப்பது ஆகியவை மூலம் நிறைவேற்றப்படுகின்றன. பல்வேறு வேலை வாய்ப்பினை அளிக்கும் வகையில் மாவட்ட ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி நிறுவனம், ''டாட்கோ'' உருவாக்கும் திட்டங்கள் மற்றும் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், மேற்கு தொடர்ச்சி மலை வளர்ச்சித் திட்டம், தொகுப்பு வளர்ச்சி திட்டம், வறட்சிப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் ஆகியவற்றையும் கதர் வாரியம் ஒருங்கிணைத்து செயல்படுத்துகிறது. இத்திட்டங்கள் கிராமப் புறங்களில் வேலைவாய்ப்பை உருவாக்கும்.